

# பார்கவ் சுந்தரம்

**"உண்மையான நண்பன், உனது குறைகள் புரிந்தாலும் நிறைகளை மட்டுமே உனக்குக் காட்டுவான்; உனது பயங்களை உணர்ந்தும் உனது நம்பிக்கையை அரண் செய்வான்; உனது கவலைகளைப் பார்ப்பான், எனினும், உனது ஆன்மாவைத் தூண்டுவான்; உனது இயலாமைகளை அறிவான்; என்றாலும் உன்னால் முடியும் செயல்களை வலியுறுத்துவான்." என்றார் வில்லியம் ஆர்தர் வார்ட்.**

1998 இல் நிறுவப்பட்ட 'கல்லிடை மோட்டார்ஸ்' நிறுவனம், உடல் ஊனமுற்றோருக்காக செய்யப்படும் ப்ரத்யேக இயந்திர சக்கரவண்டிகள், படிதூக்கிகள், நடமாட உதவி செய்யும் கருவிகள்-இவைகளை இந்தியாவில் தயாரிக்கும் ஒரே நிறுவனமாகும். வாடிக்கையாளரின் ஊனத்தின் தன்மையையும், இந்த கருவிகள் மூலம் அவர்களின் வாழ்வு முறை எவ்வாறு மாற்றமடையக் கூடும் என்பதனையும் நன்கு ஆராய்ந்து அறிந்த பிறகே உருவாக்கப்படும் கருவிகள் இவை. இதுவே மற்றவர்கள் தயாரிக்கும் கருவிகளுக்கும், இவர்கள் உருவாக்கும் கருவிகளுக்கும் உள்ள அடிப்படை வேறுபாடு. உதாரணமாக, 20 வயதான தனது உடல் ஊனமுற்ற மகனை முழுவதுமாக கவனித்து வரும் 55 வயது நிறைந்த ஒரு பெண்மணி, ஒரு சந்தர்ப்பத்தில் மனத்திட்பம் குறைந்த நிலையில் 'கல்லிடை மோட்டார்ஸ்' உருவாக்கும் ப்ரத்யேக எளிதில் நடமாட உதவும் கருவிகளைப் பற்றிய விளம்பரத்தைப் பார்த்து, அவர்களை நாடிச் சென்றார். அவரது கோரிக்கையை மனதில் கொண்டு, தரைமட்டத்தில் இருந்து அவரது மகனை ஏற்றிய பிறகு, ஒரு முழுமையான சக்கர நாற்காலியாக உருமாறி அவரைத் தள்ளிச் செல்ல ஏதுவாக இருக்கும் கருவியினை உருவாக்கினார்கள் 'கல்லிடை மோட்டார்ஸ்' நிறுவனத்தார். இந்த நிறுவனத்திற்குப் பின்னால் பக்கபலமாக இருப்பவர் திரு. பார்கவ் சுந்தரம்.


தானுந்து தொழிலில் (automobile industry) முன்னோடியாக விளங்கிய பரம்பரையைச் சார்ந்தவராகிய பார்கவ், நூதனமான முறையில் பொருட்களைத் தயாரிப்பதில் வழிமுனைவராகக் கனவு கண்டதில் எந்தவித ஆச்சரியமும் இல்லை. நமது நாட்டிலேயே முழுவதுமாக தயாரிக்கப்பட்ட உந்து மிதிவண்டிகளை (motor cycles) முதன்முதலாகத் தந்த என்ஃபீல்ட் (Enfield Motors) நிறுவனத்தை நிறுவிய கே.ஆர்.சுந்தரம் அவர்களின் பேரன் திரு. பார்கவ். ஒன்றுகூட்டுப் பிரிவிலிருந்து (assembly unit) முழுமையான தயாரிப்பு நிறுவனமாக தனது பாட்டனார் ஆக்கியதை அருகில் இருந்து கவனித்த பார்கவின் நாடி நரம்புகளில் தானுந்து தயாரிப்பும் விற்பனையும் பாய்ந்து ஓட, கோயம்பத்தூரில் உள்ள பி.எஸ்.ஜி. கல்லூரியில் மேலாண்மையில் முதுகலை பட்டம் (MBA) பெற்ற பின், என்ஃபீல்டிலேயே கோயம்பத்தூரில் விற்பனைப் பிரிவில் சேர்ந்தார்.

தனது பொறுப்புகளைத் திறன்பட நிறைவேற்றினாலும், அவர் உள்ளே இருக்கும் 'நூதனன்', இன்னும் ஏதாவது செய்ய வேண்டும் என்ற தாகத்தைக் கிளறிக் கொண்டே இருக்க, என்ஃபீல்ட் ராஜாங்கத்தின் வெளியே உள்ள வாய்ப்புகளை நோக்கி நினைக்க ஆரம்பித்தது அவர் மனம். என்ஃபீல்டில் நிகழ்ந்த ஒரு பெரிய வியாபார வினைமுனைத் திறத்தால் (Business Strategy), குடும்பம், நிறுவனத்திலிருந்து தமது பெரும்பாலான பங்குகளைக் குறைக்க நேர்ந்தது. இதுவே, பார்கவ் தமது முற்றார்வத்தை-தான் மிகவும் விரும்புவதை-ஒரு புதிய கோணத்திலிருந்து பார்ப்பதற்கு உந்துதலாக அமைந்தது. 'இதுவரை யாராலும் செய்யப்படாததை செய்து, நேர்மறையான மாற்றத்தை நிகழ்த்து. எதைச் செய்தாலும், அதில் சிறந்தவனாக இரு' என்பதே அவரது புதிய தாரக மந்திரமாயிற்று. தயாரிப்பு மற்றும் உற்பத்தியிலும், மாற்று சக்தி கொணர்வதிலும் தம்மை ஈடுபடுத்திக்கொண்ட அதே நேரத்தில், தம்மைச் சுற்றியிருக்கும் மனிதர்களையும் அவர்களது தேவைகளையும் அவர் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தார்.

மிதிவண்டிக்கும் (cycle) உந்து ஈருருளிக்கும் (moped) இடைப்பட்ட ஒரு போக்குவரத்து வகை ஒரு முக்கிய தேவையாக அவருக்குத் தோன்றியது. 'இன்றுகூட கிராமங்களில், ஓய்வுபெற்றவர்கள், விசையுந்தோ (motor cycle) உந்து ஈருளியோ (moped) வைத்திருக்கும் அளவுக்கு வசதி இல்லாததால், மிதிவண்டிதான் வைத்திருக்கிறார்கள். மேலும், விவசாயியாகவோ, கட்டிடத் தொழிலாளிகளாகவோ இருப்பதால், ஒரு நாளைக்கு 50 கி.மீ.மிதிவண்டியில் மிதித்து, 10 மணி நேர கடும் உழைப்பிற்குப் பிறகு மீண்டும் வீட்டிற்கு செல்வதால், அவர்கள் மிகவும் களைப்படைந்து காணப்படுகிறார்கள். 'கிராமப்புற வாழ்க்கைக்கே உரித்தான இந்த நியாயமற்ற ஏற்றத்தாழ்விற்கு ஏதாவது செய்ய வேண்டும் என்ற உந்துதலின் விளைவே இயந்திரப்படுத்தப்பட்ட மின்சார மிதிவண்டி (motorized electric cycle). இது மிதிவண்டிக்கு அடுத்த படி; அதே சமயத்தில் உந்து ஈருளியைவிட கட்டுப்படி!



மின்சார மிதிவண்டி திட்டம் சரிவர செயல்படுத்தப்படாமல் இருந்தும், பார்கவ் அவர்களுக்கு இது அவருக்கு அப்பொழுது தேவைப்பட்ட நம்பிக்கையினை அளித்தது. இந்த சந்தர்ப்பத்தில்தான்-1998இல், ஊனமுற்றோரின் வாழ்வை செம்மைப்படுத்தி உயர்த்துவதே தமது லட்சியம் என்பது புரிந்து போனது. உடல் ஊனமுற்ற பலரைப் பணியில் அமர்த்தினார். அவர்களது மூன்று சக்கர வாகனங்களையும் மற்ற உபகரணங்களையும் இயந்திரப்படுத்தினார். தமது பூர்விக ஊரான ‘கல்லிடைக்குறிச்சி’ யின் முதல் பாதி - ‘கல்லிடை’-, நிறுவனத்தின் முதல் பாதியாகி, ‘கல்லிடை மோட்டார்ஸ்’ என உருவெடுத்தது. சக்கரவண்டிகளை இயந்திரப்படுத்துவதில் தொடங்கி, வாடிக்கையாளர்களின் கோரிக்கைகளுக்கு ஏற்ப, ஏனைய கருவிகள் மற்றும் உபகரணங்களும் பொருத்தப்பட்டன.



''எனக்கு முதலில் தொழில்நுட்ப அறிவு எதுவும் இல்லாதபோதும், ஒவ்வொரு புதிய வாடிக்கையாளரிடமிருந்தும் நாங்கள் கற்றோம்; வடிவமைப்பை செம்மைப்படுத்தினோம். மனிதனின் இடப்பரப்பு தேவை, நடமாட்டம், தழுவுதிறன் இவற்றோடு, பல்வகையான செயல்கூறுகளைப் பற்றிய எங்களது புரிதலும் அதிகமாயிற்று.

ப்ரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட நடமாட ஏதுவான கருவிகளின் பக்கம் சென்றது எங்கள் பார்வை. புதிய செயல்பாட்டுக் கூறுகள் நிறைந்த கருவிகளைச் செய்தவுடன், புதிய பொருட்களின் உதவியுடன் அவற்றை செம்மைப்படுத்தினோம். இந்தியா முழுவதுமுள்ள பல மருத்துவமனைகளும், இயலாரகங்களும் (Hospices) எங்கள் வாடிக்கையாளர்கள். இவர்களுக்கு, படுக்கை இணைந்த சக்கர நாற்காலிகள், படிதூக்கி (stair & lift) நீச்சல்குள மின்தூக்கி (swimming pool lift), உடற்பயிற்சி மருத்துவத்திற்கான (physiotherapy) சாதனங்கள், ப்ரத்தியேக எளிதில் நகரும் தன்மையுடைய சாதனங்கள் (specialized mobility aids), பல்வகைப் பயனுடைமை ஊர்திகள் (MUVs) போன்றவைகளை நாங்கள் செய்து தருகிறோம்,'' என்று மிகுந்த தன்னடக்கத்துடன் கூறுகிறார் திரு. பார்கவ்.

சமுதாயத்தின் கீழ்நிலையில் உள்ளவர்களும் 'கல்லிடை'யால் பயனடைகிறார்கள்.

> ''ஒரே குடும்பக் காப்புப் பொருளீட்டுநருக்கு (sole bread winner) விபத்தினால் உடல் ஊனமடைந்தால், அந்தக் குடும்பத்தின் எதிர்காலம் எப்படி பாதிக்கப்படும்! இந்தப் பரிதாப நிலையினை அந்த பாதிக்கப்பட்டவருக்கு நடமாட ஏதுவான கருவிகளைக் கொடுக்கும் மூலம் நீக்கி, அந்தக் குடும்பத்திற்கு நம்பிக்கையின் ஒரு சிறிய ஒளிக்கீற்றினை அளிப்பது எனக்கும் எனது குழுவிற்கும் மட்டற்ற மகிழ்ச்சியினை அளிக்கிறது''

''ஒரே குடும்பக் காப்புப் பொருளீட்டுநருக்கு (sole bread winner) விபத்தினால் உடல் ஊனமடைந்தால், அந்தக் குடும்பத்தின் எதிர்காலம் எப்படி பாதிக்கப்படும்! இந்தப் பரிதாப நிலையினை அந்த பாதிக்கப்பட்டவருக்கு நடமாட ஏதுவான கருவிகளைக் கொடுக்கும் மூலம் நீக்கி, அந்தக் குடும்பத்திற்கு நம்பிக்கையின் ஒரு சிறிய ஒளிக்கீற்றினை அளிப்பது எனக்கும் எனது குழுவிற்கும் மட்டற்ற மகிழ்ச்சியினை அளிக்கிறது'', என்கிறார் பார்கவ் அவர்கள்.

பார்கவ் அவர்களின் மனைவி ப்ரியா, அவருடைய தொழிலிலும் கூட்டாளி. ஒரு வக்கீலாகிய இவர், நிறுவனத்தின் சட்ட விஷயங்கள், நிர்வாகம் மற்றும் விற்பனை போன்றவற்றை கவனிப்பது மட்டுமல்லாமல், இந்த மரபுசாரா தொழிலைத் திறம்பட நடத்த அவருக்குத் தேவையான தன்னம்பிக்கையினை வளர்ப்பதில் உறுதுணையாக இருக்கிறார். ஆரம்ப காலத்தில், மனதை உருக்கும் சில நோயாளிகளைப் பார்க்க நேர்ந்தபொழுது, ப்ரியாதான் அவரது தைரியத்திற்கும், பலத்திற்கும் அடிமூலம்.

15 வருடங்களாக இந்தத் துறையில் இருந்ததனால், பல மதிப்பீடுகளும் அளவுகோல்களும் உயரவும், கூடவே வாடிக்கையாளர்களின் எண்ணிக்கையும் கூட, வருடத்திற்கு 100,000 சக்கர நாற்காலிகள் வரை தயாரிக்கக்கூடிய வசதியுடன் கல்லிடை தொழிற்சாலை நிறுவப்பட்டது.'' தனிப்பயனாக்குதலுக்கு (customisation) நேரம் எடுத்தாலும், காலக்கெடுவை நான் சரியான முறையில் சந்திக்க இந்தத் தொழிற்சாலை உதவுகிறது. இதில்தான் எனது தனித்தன்மை இருக்கிறது. ஒரு கடினமான பிரச்சனையை எடுத்து அதற்குத் தீர்வு காணுவது. எனினும், வீட்டில் அடைந்துகிடக்கும் ஒரு மனிதனை சுதந்திரத்துடன் நடமாட வைக்கிறோம் என்ற நினைப்பு தரும் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை'', என்கிறார்.

உடல் ஊனத்தின் பல பரிமாணங்களைப் பார்த்ததினால், ஊனத்தைப் பற்றிய கண்ணோட்டம் சற்று வித்தியாசமாக இருக்கிறது பார்கவ் அவர்களுக்கு. அவருடன் பணி புரிபவர்களில் பலர் உடல் ஊனமுற்றிருந்தாலும், சூழ்நிலைக்கு ஏற்ப தம்மை மாற்றிக் கொண்டிருப்பவர்கள். 'இது மானுடத்தின் வெற்றி' என்கிறார் பார்கவ். ஊன்றுகோல் உபயோகப்படுத்தியும், மற்றவர்களை விட மிக வேகமாகப் படிகளை ஏறும் தமது அலுவலக உதவியாளரைப் பற்றியும், உடல் ஊனமுற்றிருந்தும் பல இடங்களுக்குச் சென்று கருவிகளை இணைத்து, பொருத்தி, அதனால் வாடிக்கையாளர்களின் உற்சாகத்திற்குக் காரணமாக இருக்கும் தமது விற்பனை மேலாளரைப் பற்றியும் பெருமையாகப் பேசுகிறார். தம்மைப்போல இருக்கும் இன்னொருவர் தமக்கு சேவை தருவதால், ஊக்கமடைதல் இயற்கைதானே!

இலவச சக்கர நாற்காலிகளை இயலாதவர்களுக்கு கொடுத்து வரும் 'உலக சக்கர நாற்காலி அமைப்பிற்கு' (International Wheelchair Foundation) சக்கர நாற்காலிகளை வழங்கி வருகிறார் திரு.பார்கவ். 'உலக சுகாதார மற்றும் கல்வி அமைப்பு' (Global Health and Education Foundation) எனப்படும் அறக்கட்டளையின் ஒரு பிரிவே இந்த அமைப்பு. குழந்தை, பருவ வயதுக்காரர்கள் மற்றும் வயது முதிர்ந்தவர் என எல்லோருக்கும் சக்கர நாற்காலிகளைக் கொடுப்பது இந்த அமைப்பின் நோக்கம்.

கண்ணாடி எவ்வாறு பார்வைக்கோளாறுகளை சரிப்படுத்துகிறதோ, அதைப்போலத்தான், செயற்கைக் கால்களும், நடமாட உதவி செய்யும் சாதனங்களும் சரிப்படுத்துகின்றன. எனவே, 'ஊனமுற்றோர்' என்று இவர்களை ஒதுக்குவதோ அல்லது இவர்களின் திறனை சந்தேகிப்பதோ தவறான ஒன்று என்று ஆழமாக நம்புகிறார் பார்கவ். ஊனத்தை வெல்லும் மனத்திண்மையும், மனஉறுதிப்பண்பும் 'குறை' என்று கருதப்படுவதை ஈடு செய்கிறது. 'இந்திய சக்கரநாற்காலி அறக்கட்டளை' (The Wheelchair Trust of India) என்னும் அமைப்பின் மூலம் தாம் சொல்வதை செய்து காட்டுகிறார். இந்த அமைப்பில் ஊனமுற்றோர்களின் திறன், கல்வித்தகுதி இவை அடங்கிய தகவல் தளத்தினை (database) பராமரிப்பதைத்தவிர அவர்களுக்குத் தொழிற்பயிற்சியும், வேலை மேம்பாட்டுக்கான ஆலோசனையும் வழங்கப்படுகிறது. வேறு அலுவலங்களில் அவர்களை வேலைக்கு அமர்த்தவும் திடமான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பார்கவ், வியாபாரம் மற்றும் மேலாண்மைத்துறையில் பட்டம் பெற்றவரானாலும், தொழில் நுட்பத்தின் மீதும், நூதனத்தின் மீதும் வைத்திருக்கும் காதல் அவரைத் தயாரிப்புத்துறைக்கு இழுத்தது. மற்றவர்களுக்கு சேவை செய்யும் ஆவா, அவரை இதிலேயே முழுவதுமாக ஈடுபட வைத்தது.

'நான் செய்வதை என்னைவிட சிறந்த முறையில், என்னிடம் இருக்கும் அதே சேவை நோக்கோடு, அதே பக்தியோடு செய்யும் வேறு ஒருவரை என்னிடம் காட்டுங்கள். நான் இந்தத் துறையை விட்டு விடுகிறேன். உலகில் இன்னும் எவ்வளவோ தொழில்கள் இருக்கின்றன,'' என்று அலட்டிக்கொள்ளாமல் கூறும் இவரிடம் அடுத்த கட்டம் என்ன என்று கேட்டால், ஒரு புன்சிரிப்புடன் 'காத்திருந்து பாருங்கள்!' என்கிறார். தனிப்பயனாக்கும் சக்கர நாற்காலிகளை முதன்முறையாக நமது நாட்டில் தயாரித்த திரு. பார்கவ் சுந்தரம், ஊனமுற்றோர்களின் நண்பர். சென்னையின் முதன்மை சான்ற வெற்றி வீரர்!